விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 2 முஹர 13 இதழ் 220

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-9-1986

கினிகத்தேனை அல்லித் தோட்டத்தில்——

## தமிழ்த் தொழிலாளர் மீது காடையர்கள் தாக்குதல்

### 150 பேர் இந்துமகாசபை மண்டபத்தில் தஞ்சம்

(நமது நிருபர்)

கினிகத்தேனையிலுள்ள அல்லித் தோட்டத்தில் தமிழ் தொழிலாளர்கள் வசித்து வந்த வயல்களுக்குள் காடையர்கள் புகுந்து தாக்குதல் நடாத்தியதில் 150 பேர் (55 குடும்பங்கள்) அனுதைகளாகி காட்டுக்குள் தஞ்சம் புகுந்திருந்தனர்.

அகதிகளான இந்த 50 குடும்பங்களும் ஹட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் இப்பொழுது அமர்த்தப்பட்டுள்ளனர்.

இக்கொலனியில் பரம்பரையாக வசித்து வந்த இந்த தமிழ் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றி விட்டு சிங்களவர்களைக் குடியமர்த்த இத்தாக்குதல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

ஹற்றன், கொழும்பு வீதியில் கினிகத்தேனை தோட்டம் உள்ளது

(8ம் பக்கம் பார்க்க)

● திருக்கோவில் தாண்டியடியில் கண்ணிவெடி——

# அதிரடிப்படையினர் நால்வர் பலி: ஆறு பேர் படுகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

**அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிலை அடுத்துள்ள தாண்டியடியில் போராளிகள் வைத்துள்ள கண்ணிவெடிக்கு அதிரடிப்படையினர் சென்ற ஜீப் வண்டி இலக்கானதால் 4 பேர் கொல்லப்பட்டனர்; 6 பேர் படுகாயமடைந்தனர். ஜீப் வண்டியும் பலத்த சேதமடைந்துள்ளது.**

நேற்று முன்தினம் இரவு இக்கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

திருக்கோயில் அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் ஜீப் வண்டியில் 10 அதிரடிப் படையினர் ரோந்து சென்றனர்.

தாண்டியடி என்னுமிடத்தை நோக்கி ஜீப்வண்டி சென்று கொண்டிருந்த பொழுது கண்ணிவெடியில் சிக்கி சின்னுபின்னமாக சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் பலியான அதிரடிப்படையினரின் சடலங்கள் கல்லடி முகாமுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. படுகாயமடைந்தவர்கள் விமான மார்க்கமாக கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நிலை ஆபத்தாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

### அரசு அறிவிப்பு

கொழும்பு புதன்

திருக்கோவிலில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடில் சம்பவத்தில் 3 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துளளது.

## இராணுவம் ‘ஷெல்’ தாக்குதல் மக்கள் வெளியேற்றம்

(நமது நிருபர்)

மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து தொடர்ச்சியாக ஏவிவிடப்பட்டுக் கொண்டிருக்கும் ஷெல் தாக்குதலால் 35 குடும்பங்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு அகதிகளாகியுள்ளனர்.

வவனிக்குளம் 2ம் யூனிட் பாடசாலையில் 20 குடும்பங்களும், மல்லாவி 4ம் யூனிட் வாசிகசாலையில் 15 குடும்பங்களும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனதிபதியின் கூற்றுக்கு த. வி. கூட்டணி மறுப்பு

சென்னை, செப் 17

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொண்ணூறு சதவீதமான அளவு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக ஜனதிபதி திரு ஜெயவர்த்தன தெரிவித்த கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி மறுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி பொலிட் பீரோ நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ''மிகைப்படுத்தப்படுமளவிற்கு

(8ம் பக்கம் பார்க்க)

## தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்ட கமாண்டோக்களை எதிர்த்து புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியா

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரையில் முகாமிட்டுள்ள கொமாண்டோக்கள் தேடுதல் வேட்டைக்கு புறப்பட்ட சமயம், தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்துவிடுதலைப்புலிகள்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தோழடியில் முகாமிட்டுள்ள கொமோண்டோக்களில் 100க

(8ம் பக்கம் பார்க்க

## மாங்குளம் இராணுவ முகாம் மீது ஈ.பி.ஆர் எல்.எவ் மீண்டும் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியா,

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாக வெளியேவர இராணுவம் எடுத்த முயற்சியை மக்கள் விடுதலைப் படை மீண்டும் முறியடித்துள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இச் சம்பவத்தின் போது இராணுவ முகாம் மீது பதில் தாக்குதல் ஒன்றையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படை நிகழ்த்தியது. இதனல் இராணுவ முகாம் பலத்த சேதத்துக்குள்ளானதுடன்

8ம் பக்கம் பார்க்க

இலங்கை அரசின் புதிய உருவாக்கங்களை

## இந்தியாபரிசிலனைசெய்தபின் போராளிகளுடன் பேச்சுவார்த்தை

சென்னை, புதன்

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுமுகமாக இலங்கை அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற புதிய உருவாக்கங்களை இந்திய அரசியல் நிபுணர்கள் ஆராய்ந்து உறுதிசெய்தபின் தமிழ் தீவிரவாத இளைஞர்கள் தலைவர்களுடன் புதுடில்லியில் அல்லது சென்னையில் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். இப் பேச்சுவார்த்தைகள் அநேகமாக தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் அமெரிக்காவிலிருந்தும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சிவ்சங்கர் ஐ நா பொதுசபை மாநாட்டிலிருந்தும் இந்தியா திரும்பிய பின்பே நடை

(4ம் பக்கம் பார்க்க)

## பொம்பர், ஹெலி ரோந்து

அளவெட்டி, புதன்

காங்கேசன்துறைத் தெகுதியை உள்ளடக்கிய பல பகுதிகளில் இன்று பொம்பர் விமானமொன்றும் ஹெலிகொப்டர் ஒன்றும் பலதடவை வட்டமிட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன

இதேவேளை கரிய நிறமுடைய சிறியஹெலிகொப்டர் ஒன்றும் பலாலிக்கு வந்து சேர்ந்துள்ளது.

ஆனையிறவு முகாமிலிருந்து ரோந்து புறப்பட்ட

# இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் “கனன் சார்ஜ்”, மோட்டார் தாக்குதல்

### கவச வாகனம் புரண்டது; நாலு சிப்பாய் படுகாயம்; காவல் அரண் தகர்ப்பு

(நமது நிருபர்)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ‘கனன் சார்ஜ்’ தாக்குதலில் ரோந்து செல்லப் புறப்பட்ட கவசவாகனம் குடைசாய்ந்தது. கவச வாகனம் குடைசாய்ந்ததால் 4 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

மேலும் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து 25 யார் தொலைவில் உள்ள காவல் அரணையும் விடுதலைப் புலிகள் வெடி மருந்து கள் வைத்து தகர்த்துள்ளனர். இதனல் இராணுவத்தினர் தரப்பில் சேதமேற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இத்தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றன.

இச்சம்பவங்கள் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பிரதேசத்திலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றுமுகமாக ஆனையிறவு முகாம்மீது எமதுவீரர்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4800

புத்தம் புதிய Kenwood, West Point குளிர்சாதனப் பெட்டிகள், Deep Freezers பெட்டிகள் 5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்டார் எலக்ரோனிக்ஸ் காட்சி அறை, 37/6, ஸ்டான்லி வீதி, (மஸ்கன் அருகாமை) யாழ்ப்பாணம். விற்பனைக்குப்பின் சேவை: யுனிசர்விஸ், 19, ஆசீர்வாதம் ஒழுங்கை, (புகையிரத நிலைய அருகாமை), யாழ்ப்பாணம். (C 4663)

## தேவை

யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி அல்லது வேம்படி மகளிர் கல்லூரி சூழலில் சிறிய குடும்பத்திற்கு வீடு வேண்டும். Annex ஆயினும் விரும்பத்தக்கது. க. கனகசிங்கம், 411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 23853 (C 4687)

பிடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. தொடர்புகொள்ளவும்: காவேரி ரெக் சென்ரர், பஸ்நிலையம் முன்பாக அச்சுவேலி. C 4675

## வகுப்புகள்

G. C. E. [A/L] பௌதிகவியல். ஆசிரியர்: N. பத்மநாதன் B Sc [Hons] 87Batch: சனி, ஞாயிறு 2-30 p. m, திங்கள் 4 p. m: [செப். 20 முதல்- நீர் நிலையியல்] "நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்", திருநெல்வேலி. (C 4680)

## கல்வி

A/L 87, 88 க்கான வர்த்தக வினா விடை வகுப்புக்கள் தபால்மூலம் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 75 சத முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும்:- நிர்வாகி, மொடேர்ன் எடியுகேசன் சென்றர், கரவெட்டி. [C 4671]

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு ஏழுக்கு 1987இல் அனுமதி கோர விண்ணப்ப முடிவு 22-09-1986. பிரவேசப் பரீட்சை 25-10-1986இல் நடைபெறும். கடந்த ஆறுண்டுப் பரீட்சைகளின் 12 வினாத் தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12-50. உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C 4627

## தவறிவிட்டது

ரோசம்மா மரியருஜரட்டினத்திற்குச் சொந்தமான அடையாள அட்டையும், பென்சன் காட்டும் 13-9-86 அன்று யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். குளோப் இன்டஸ்றீஸ், 173, 4ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (C 4684)

## நன்றி தெரிவித்தல்

தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (புளொட்) எமது வேண்டுகோளை ஏற்று, திரு. ரி. சு. முத்துக்குமாரசாமி அதிபரும், இயக்குநர்மன்ற உறுப்பினரும் ஆகிய அவரின் பாவிப்பில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளை 31-8-86ந் திகதி அபகரித்துச் சென்றதைக் கண்டுபிடித்து, 5-9-86 ல் பவுத்திரமாக அவரிடம் ஒப்படைத்தமைக்கு, எமது பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் சார்பில் அப்புனித இயக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
தலைவர்.

வலி-கிழக்கு வட பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.
6-9-86. (A 1286)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
இராசநாயகம்
பாஸ்கரன்


மலர்வு: 09-01-1968
உதிர்வு: 29-09-1985
திதி: 18-09-1986

அன்பு மகனே ஆசை மகனே மூத்தவனைப் பெற்றே பெருநிதியமென வளர்த்தோமே கடையில் இருந்ததுபோல் இருக்காமல் சிநேகிதனோடு வெளிக்கிட்டு பாதிவழியில் பறிகொடுத்தான் பாலன். ஓராண்டு ஆகிவிட்டதடா பாஸ்கரா கண்ணீர் வற்றவில்லை பாஸ்கரன் என்னும் நாமம் அனைத்துலகும் கேட்குமெனக் கனவுகள் பல கண்டோம் அக்கனவெல்லாம் வீணாகப் போய்விட்டதே பாஸ்கரா. பெற்று வளர்த்தவர் முதல் படித்துப் பழகியவர்வரை பாஸ்கரன் எங்கே என்று ஏங்கித் துடிக்கிறார்கள் அதைக் கேட்கும் போதெல்லாம் உச்சி வெடித்து உடல் சுக்குநூறுகுதடா பாஸ்கரா! பூவாய் உதிர்ந்தாலும் பொறுத்திருப்போம் என்மகனே. பிஞ்சாகி காயாகி கனிகின்ற பருவத்தில் கவர்ந்தானே காலன் உன்னை எங்கள் உயிர் உள்ளவரை உனை மறவோம்.

உன்பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

'ராஜ்பவன்'
தாவடி தெற்கு,
கொக்குவில். C 4548

## ஓராண்டு நினைவஞ்சலி



இரத்தினசிகாமணி
தங்கேஸ்பரம்

[முன்னாள் தொண்டைமானாறு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் கௌரவ செயலாளர்]

அன்னையின் மடியில்: 09-03-1942
இறைவன் அடியில்: 29-09-1985
திதி: 18-09-1986

எங்கள் அன்புத்தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு காலம் ஓடிமறைந்தாலும் இன்னும் எம்நெஞ்சில் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மகன, மகள்.

சின்னக்கடற்கரை வீதி,
தொண்டைமானாறு.
C 4652

## 2-வது வருட நினைவஞ்சலி



செல்வன்
தியாகராசா
ரவீந்திரன்
(பாலு)

ஆண்டவன் படைப்பு: 05-04-1966
அரக்கர் அழிப்பு: 10-10-1984
திதி: 18-09-1986

நான் பெற்ற செல்வமே நாட்டைக் காக்க வெண்ணி வீட்டை மறந்தாயே, என்வீர மகனே கேளாமல் பிறந்து இன்று வாழாமல் உன்னுயிரை தமிழ்த்தாய்க்கே அர்ப்பணித்தாய். மண் மீட்கப் புறப்பட்டு விண்ணேக்கி சென்ற இந்திரனே. மறைந்ததையா உன்னுடம்பு பிறந்ததையா புகழுடம்பு.
சாந்தி, சாந்தி என இயம்பி, மறுமையிலும் புகழ்பூத்து வாழ்கவெனப் போற்றுகின்றோம்,

உன்பிரிவால் வாடும்:
பெற்றோர்,
உன்உடன்பிறப்புகள்,
உறவினர்.

3-ம் வட்டாரம்,
புங்குடுதீவு. C 4533

## நாளை ஆரம்பம்

பிரிவு II
**A/L 87 DAY CLASS**
(காலை 8-00 மணிக்கு)
(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)
விபரங்கட்கு:
**New Master Institute**
BMC Lane, Jaffna.
குறிப்பு:- பிரிவு Iக்குரிய அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. (A 1332)

## முக்கிய அறிவித்தல்

Jaffna Education Centre ல் நடைபெற்றுவந்த 87ம், 88ம் ஆண்டிற்கான G.A.Q, B.A. வகுப்புக்கள்
உயர்கலைக் கல்லூரி
73, பருத்தித்துறை றோட்,
ஆனைப்பந்தியடி யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.
[A1335] S. அருள்நங்கை.

## பூசகர் தேவை

எழுவைதீவு முருகன் ஆலயத்திற்கு நிரந்தரபூசகரொருவர் தேவை. கோயிலருகாமையில் வீட்டுவசதியுண்டு வேதனம், ரூபா (1000/-) ஆயிரமும் படித்தரமும் வழங்கப்படும், தகுதி அனுபவங்களுக்கேற்ப வேதனம் அதிகரித்துவழங்கப்படுவதுடன் வருடாந்த சம்பள உயர்வுண்டு.

ஆசாரியாபிஷேகம் பெற்றவர் குடும்பத்தவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமோ 25-9-86க்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

இவ்வண்ணம்

ஐடியல் ஏஜன்சி
267, பீ. மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23648

செ. மா. பரமலிங்கம்
பொதுச்செயலாளர்
எழுவைதீவு,
சைவபரிபாலனசபை.
[C 4678]

## "மழலைகளின் சத்துணவும்-மன-உடல் வளர்ச்சியும்"

எனும் விடயம் பற்றிய
**கருத்தரங்கு**
இடம்: மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு
காலம்: 21-09-86 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00

கருத்துரை வழங்குவோர்:
குழந்தை வைத்திய நிபுணர் த. இராமதாஸ்
குழந்தை வைத்தியநிபுணர் கலாநிதி வாமதேவன்
மனோவைத்தியநிபுணர் கலாநிதி ஏ. செல்வரத்தினம்
மனோவைத்திய நிபுணர் கலாநிதி D.J. சோமசுந்தரம்
அனைவரையும், முக்கியமாக இளம் தாய்மார்களை அழைக்கிறோம்.

**வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்**
[C 4676]

## அறிவித்தல்

(1) வல்லிபுரம் கணபதி றவிகரன் (சண்டிலிப்பாய்)
பாஸ்போட் இலக்கம் H 0067389

(2) மேரி ஜோசேப் ஜோசேப் பேசி (யாழ்ப்பாணம்)
பாஸ்போட் இலக்கம் H 0485809

(3) ஆறுமுகம் செல்வராசா (சுன்னுகம்)
பாஸ்போட் இலக்கம் J 0050860

(4) நாகமுத்து மகேந்திரன் (சண்டிலிப்பாய்)
பாஸ்போட் இலக்கம் H 0324884

(5) கந்தசாமி வசந்தகுமார் (யாழ்ப்பாணம்)
பாஸ்போட் இலக்கம் H 0104166

மேற்குறிப்பிட்டவர்கள் தயவுசெய்து உடனடியாக என்னை சந்திக்கவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு உடுவில்.
[A 1336]

### மணிவாக்கு

தன் அப்பம் தன்னைச் சுடும்
ஒட்டப்பம் வீட்டைச் சுடும்.

—பட்டினத்தார்.

# நமதுநோக்கு

## பிறந்ததினச் சிந்தனைகள்

முடியாட்சிக்கு பிரிட்டனில் இன்றும் இடமுண்டென்பதை ஆட்சேபிக்கும் அரசியல் நிபுணர் இருக்கலாம். ஆனால் அதற்குத் தக்க இடமுண்டு.

அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற பொது நல நாடுகளின் விளையாட்டுப் போட்டியை பெரும்பான்மை நாடுகள் பகிஷ்கரித்தன. இது பிரிட்டிஷ் ராணி எலிஸபெத்துக்கு பெரும் கவலை ஏற்படுத்தியது. அதனை ஆட்சித்தலைவர் பிரதமர் தாட்சருக்கு உணர்த்திய போதும் அவருடைய பிடிவாதம் நீங்கவில்லை.

தென் ஆபிரிக்காவிற்கெதிராக பொருளாதாரத்தடைகள் விதிப்பதை எதிர்த்து நிற்கும் ஒரே ஒரு காமன்வெல்த் நாடு அதுவும் அந்த நிறுவனத்துக்குத் தலைமை தாங்கும் பிரிட்டன் இந்த நிலைகொண்டது மக்களின் நிலையையோ மன்னரின் நிலையையோ பிரதிபலிக்கவில்லை. பிரதமர் தாட்சரின் அரசியல் பிடிவாதத்தைக் காட்டியது.

இதற்குக் காமன்வெல்த்தைப் பலியாக்குவதா? என்பதே பிரிட்டிஷ் ராணியின் கவலை ஆனால் ஆட்சித் தலைவருக்கெதிராக நாட்டின் மன்னர் நடவடிக்கையில் இறங்குவது பிரிட்டிஷ் ஆட்சிமுறைக்கு முரண்பட்டது. அந்த மரபைக் கட்டிக் காப்பாற்றுவதில் இன்றைய ராணி பெரும் பெயர் பெற்றிருக்கிறார். ஆனால் தீவிரமான ஒரு கட்டம ஏற்படுமானல் கன்சவேட்டிவ் பிரதமரை தூக்கி எறிந்து ராணியின் பெருமையை முடியாட்சியின் மகிமையை நிலைநாட்ட பிரிட்டிஷ் மக்கள் தயங்கார்.

இவ்விதசிந்தனையைஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் அரசியல் நிபுணர்கள் கருத்துரைத்திருக்கின்றனர். ராணியின் நிலைகண்டு சற்றே நெகிழ்ந்த 'இரும்புப் பெண்' பிரதமர் இதற்குச் சான்றளிக்கின்றார்.

நாட்டை ஆளும் மன்னன் இறைவனின் பிரதிநிதி: மண்ணுலகத்துக்கு இறைவனால் நியமிக்கப்பட்டவன் என்ற கருத்து மேற்கிலும் கிழக்கிலும் இருந்துவந்தது. 'வேந்தனும் ஓங்குக' என்ற தேவார அடியும், 'மன்னன் கோன்முறை அரசுசெய்க' என்ற திருப்புராண வாழ்த்தும் இதனையே குறிக்கின்றன.

இன்றைய உலகில் மன்னர் ஆட்சி பொதுவாக மலையேறிவிட்டது. லண்டனில் உள்ள லண்டன் ரவரும் (London Tower) ஷேக்ஸ்பியரின் துன்ப நாடகங்கள் சிலவும் பிரிட்டிஷ் முடியாட்சியின் கொடுமைகளை விளக்கும்.

மன்னனின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி, பின்னர் அதனை மட்டந்தட்டி, ஆட்சிக்கு அணிகலனாக அமைக என்று படிப்படியாக முடியாட்சியின் கொடுமைகளை நீக்கி, மக்கள் ஆட்சிக்கு மன்னன் தலைமை வகிக்கும் சம்பிரதாயமே பிரிட்டனின் தனித்துவ ஆட்சிமுறை.

மன்னரை முற்றாக ஒழித்து மக்கள் பிரதிநிதியே ஆட்சியின் அதிகாரம்பெற்ற தலைவராகக் கொண்ட நாடுகள், சில பிரதமரையும், சில ஜனாதிபதியையுமே நிர்வாகத் தலைவராகக் கொண்டுள்ளன.

மிகப் பெரும் ஜனநாயக நாடாகிய இந்தியாவில் நிர்வாக அதிகாரம் பிரதமரிலும், அண்டை நாடாகிய சிறிய இலங்கையில் ஜனாதிபதியிலும் முற்றாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பிரதமரும், இந்தியப் பிரதமரும், இரு நாடுகளின் பிரதமர்களே என்ற பாணியில், கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் பிரதமர் பிரேமதாசாவின் 'Indian Counterpart' என்றொரு வசனம் தீட்டியிருப்பது அறியாமை மட்டுமல்ல; இவ்விரு நாடுகளை முடிஞ்சுவிடும் பணியில் ஒருவித சேட்டையெனலாம்.

நாம் இன்று இந்த நாட்டின் 'மன்னன்' என்று கொள்ளும்வகையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அதிஉத்தம ஜனாதிபதியின் எண்பதாவது பிறந்ததினத்தில் எத்தகைய குதூகலம் கொள்ளவேண்டும்! அது நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத உணர்வு.

போரில் உழன்று வரும் நாடாயிருந்தாலும், சிவில் ஆட்சிக்கும் மக்கள் பாதுகாப்பாகவும், குறைவிலாது உயிர் வாழ வைக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கே உரியது.

இன்று அந்தப் பொறுப்பக்கு பங்கம் விளைந்திருப்பது கண்கூடு. இருப்பினும் நாகரிக மனிதர் 'அரசன்' வாழ்கவென்று வாழ்த்தி தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்கள் அநியாயமாக மடிவதை நலிவுறுவதை நிறுத்துங்கள் என்று மகஜர் அனுப்புகின்றனர்.

வருடம் முடிவடைய முன்னரே சமாதானம் கிட்டுமென்று நம்பிக்கை தெரிவிக்கும் ஜனாதிபதி அதில் மக்கள்- எல்லா சமூகத்தவரும்- நம்பிக்கை கொள்ளுமளவில் போர் நிறுத்த நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.

ஆறுவருடப் போரைப் பூர்த்தி செய்யும் வளைகுடா யுத்த வீரர்கள்- ஈராக் ஈரான், இனிமேல் சிவிலியன்களைத் தாக்குவதில்லை என்ற உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். லாபம்!

இவ்வித ஒப்பந்தத்தை யாவது ஜனாதிபதியின் பிறந்த தினப்பரிசாக, மக்களுக்கு- குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு உதவ முடியுமானால் அது ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டுவர முடியும். தமிழ் போராளிகள் இதனைக் கவனத்திற் கொள்வாராக.

தமிழ் பிரதேசங்களில் இலங்கை ராணுவம் தொடர்ந்து நடத்தும் அட்டூழியங்கள் நீங்க வழி பிறக்கும். தமிழ் போராளிகள் ராணுவத்தைத் தாக்கும் வாய்ப்பில்லாது போனால் அமைதிக்கு வழிஉண்டென்ற நம்பிக்கையில் தமிழ் மக்கள் சார்பாகவும், நாட்டின் நலன் கருதியும் ஜனாதிபதியை வாழ்த்தி இவ்வரத்தை மீண்டும் வேண்டி நிற்கின்றோம்.

## ஆசிய மாணவர் அறைகூவல்!

# அனைத்து கொலைகளையும் உடனடியாகக் நிறுத்துக!

சுதந்திரத்துக்குப் பின்னர், 1984 முதல் இலங்கை அரசு திட்டமிட்ட ரீதியில் மேற்கொண்டு வரும் இனப் படுகொலையினால் தமிழ் மக்களின் வாழ்க்கையே பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலப் பிரமாணங்கள் உட்பட இதர 'காட்டுமிராண்டி'ச் சட்டங்கள் மூலம் ஜெயவர்த்தன அரசின் இராணுவத்தால் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட இனப் படுகொலையை நாம் நிராகரித்தும், கண்டிக்கிறதுமான அதேவேளையில், அந்நிய அரசாங்கங்களினாலும் ஆயுத விநியோகம் மற்றும் இராணுவப் பயிற்சி, பல்வேறு பொருளாதார உதவிகள் வாயிலாக ஏகாதிபத்திய வாதிகளினாலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் ஆதரவும் உதவியும் வெகுஜனப் படுகொலைகளை மேலும் செய்துவரும் அரசு ஒன்றினை நியாயப்படுத்தவே துணை செய்கின்றன என்ற உண்மையையும் இனங்கண்டு கொண்டுள்ளோம்.

எனவே நாம், இன்றைய சிறீலங்கா அரசுக்குச் சிங்கப்பூர், சீனக் குடியரசு (தாய்வான்), மக்கள் சீனக் குடியரசு, தென் கொரியா, மலேஷியா, இனவாத தென் ஆபிரிக்கா, இத்தாலி, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்று ஸயோனிஸ இஸ்ரேல் ஆகியவற்றின் அரசாங்கங்களினால் ஆயுதங்கள் வழங்கப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தற்போதைய இலங்கை அரசுக்கு சிங்கப்பூர், சீனக் குடியரசு(தாய்வான்), மக்கள்சீனக் குடியரசு, தென் கொரியா, இத்தாலி, மலேஷியா, இனவாத தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து, ஸயானிஸ இஸ்ரேல் ஆகியவற்றின் அரசுகள் ஆயுதங்களை வழங்கியும் விற்பனைசெய்து வருவதையும், அமெரிக்க ஏகாதிபத்தியம், இஸ்ரேலின் 'மொஸாத்' மற்றும் 'ஷின் ஸத்', இங்கிலாந்தின் 'S.A.S.மற்றும் K.M.S., பாகிஸ்தான் ஆகியவற்றினால் இலங்கை ஆயுதப்படைகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனவே, எழுந்தமானமாய்ச் செய்யப்பட்டுவரும் படுகொலைகளை நிறுத்துமாறும், வட,கிழக்குப் பிரதேசங்களிலிருந்து அனைத்துத் துருப்புக்களையும் வாபஸ்பெறுமாறும், ஆகாயத்திலிருந்து மேற்கொள்ளப் பட்டுவரும் குண்டுவீச்சுத் தாக்குதல்களையும், கரையோரப் பகுதிகளில் நடாத்தப்பட்டு வரம் 'ஷெல்' தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்துமாறும் நாம் கோருகிறோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழும், இதர 'கறுப்பு'ச் சட்டங்களின் கீழும் தமிழ் பேசும் மக்களையும் அரசாங்கத்துக்கு எதிரான சிங்கள சக்திகளையும் கைதுசெய்து தடுத்து வைக்கும் போக்குக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறும், மேற்படி சட்டங்களின்கீழ்க் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து அரசியற் கைதிகளை விடுதலை செய்யுமாறும் நாம் ஜெயவர்த்தன அரசாங்கத்தைக் கோருகின்ற அதே வேளையில், நாட்டில் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதைக் கருத்திற்கொண்டு, ஜெயவர்த்தன அரசுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப்பட்டுவரும் இராணுவ, அரசியல், பொருளாதார, ராஜதந்திர உதவிகளை நிறுத்துமாறு அனைத்து வெளிநாட்டு அரசுகளையும் கோருகின்றோம்.

**ஈழ இளைஞர், மாணவர் பொது ஒன்றியத்துடனே**

**இணைந்து ஆசிய மாணவர் ஒருமைப்பாட்டுச்**

**சங்கம் அண்மையில் தமிழ்நாட்டில் நடாத்திய ஒருமைப்பாட்டு மகாநாட்டில் இயற்றப்பட்ட**

**தீர்மானங்களின் சுருக்கம் இது.**

அனைத்து அரசாங்கங்களும் இலங்கைப பிரச்னை மோசமாகி வருவதையிட்டும், அங்கு நடைபெறும் இரத்தக்களரியையிட்டும் தமது கவலையைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ள அதேவேளையில், தமிழ்பேசும் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கும் சுயாதீனத்துக்குமாக நடாத்தும் போராட்டத்தை அங்கீகரித்து ஆதரவு வழங்கவேண்டும்.

ஜெயவர்த்தன ஆட்சியால் இழைக்கப்பட்டுவரும் எல்லாக் குற்றங்களையும் அறிந்துள்ள இந்திய அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தவும் பாதுகாக்கவும் தன்வசமுள்ள இருதரப்பு, சர்வதேச செல்வாக்கு வளத்தைப் பிரயோகித்தாக வேண்டும்.

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளை உலகறியச்செய்யும் வகையில் ஜெயவர்த்தன ஆட்சியினரைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த எல்லா அரசாங்கங்களும் முயலவேண்டும்.

முழு உலகமும், நீதியை நேசிக்கும் அனைத்து மக்களும் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், சுயாதீனத்தையும் அங்கீகரிக்கவேண்டும்.

— தமிழில் பெரி

ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈழவர்களுடனான எமது உறுதியான ஒருமைப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்வதுடன், தமிழ்பேசும் மக்களைப் பாதுகாக்க எமது பலத்தை ஒன்றுசேர்த்து வளர்த்து வலுப்படுத்துவோமாக!

# மணிவிழாக்காணும் வித்தியாசாலை

கல்வியிலும், ஒழுக்கத்திலும் தன்னிகரற்ற, தனித்துவமான ஒரு தனியிடத்தை அன்று தொட்டு இன்று வரைக்கும் வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலை பெற்று வருகின்றது. எத்தனையோ நற்பிரஜைகளையும், சமூகத் தொண்டர்களையும், கல்விமான்களையும் சமூகத்திற்கு மட்டுமல்லாது, நாட்டுக்காகவும் ஏன் இந்த உலகுக்காகவே உருவாக்கித் தந்த பெருமை இப்பாடசாலைக்குண்டு. இப்பாடசாலை 1926ம் ஆண்டு "இந்து போட்" (Hindu-board) டினால் ஆரம்பிக்கப் பட்டது இதன் அமைவிடத்திற்கு தெற்கே வானளாவி நிற்கும் பழம் பெருமைக்குரிய யாழ்ப்பாணக்கல்லூரியும், வடக்கே சைவத்தை கட்டிக்காத்து வளர்த்து வரும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும் அமைந்துள்ளன.

கடுகு சிறிதாயினும் காரம் பெரியது" என்ற முதுமொழிக்கேற்ப தன் உருவத்தாலும் மாணவர்களின் எண்ணிக்கையாலும் சிறிதான இப்பாடசாலை கல்வியில் மட்டும் இவ்வளவிற்கு உயர்ந்து காணப் படுகின்றது. இதற்குக் காரணங்கள் பலவுள்ளன.

முதலாவதாக மாணவரின் ஒழுங்கும், ஒழுக்கமும் இதனை முன்மொழிகின்றன. பாடசாலைக்கட்டுப்பாடும், ஆசிரியர்களின் அரியசேவையும் இதனை வழிமொழிகின்றன. அதிபரின் செயற்பாடும் ஊராரின் ஆதரவும் இதனை உறுதிசெய்கின்றன. வட்டாரப் போட்டி முதல் மாவட்டப் போட்டி வரை கல்வியிலும் சரி விளையாட்டுத்துறையிலும் சரி இப்பாடசாலை போட்டியிட்டுக் கொண்டேயிருக்கிறது. வெற்றியீட்டிக் கொண்டும் இருக்கிறது. இங்குகற்பித்த கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்கள் கற்பித்தலையே முழுமூச்சாகவும் அதனையே அவர்களின் உயிர்மூச்சாகவும் கொண்டு சேவை செய்கின்றனர்.

தற்போது இப்பாடசாலையானது வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை தலைமை பாடசாலையாக கொண்ட கொத்தணி அமைப்பில் ஒரு முக்கிய உப கொத்தணிப் பாடசாலையாக அங்கம் வகிக்கிறது. தற்போது இப்பாடசாலையினது 7ம் ஆண்டு தொடக்கம் 11ம் ஆண்டுவரையான வகுப்புகள் சங்கரத்தை வீதியில் உள்ள புதியதோர் மாடிக்கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வருகின்றன. இங்கு குறிப்பிடவேண்டிய சிறப்பம்சம் யாதெனில் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இவ்வூரையே பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்களாவர். இதன்காரண

(5ம் பக்கம் பார்க்க)

# "யாழ் செந்தில் கதிர்வேல் விழா" நடத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

'யாழ் செந்தில் கதிர் வேல் விழா' என்ற நாமத்தில் யாழ்ப்பாணத்தில் வருடா வருடம் வேல் விழா நடைபெறும்.

இதற்கான தீர்மானம் நேற்று நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சைவசமய ஆகம விதிகளுக்கமைந்த முறையிலும், தமிழர்களின் கலை, கலா சாரங்களைப் பிரதிபலிக்கத்தக்க வகையிலும் இவ்விழாவை நடாத்த முடிவுசெய்யப்பட்டது.

யாழ்நகரில் உள்ள செந்தில் கதிர்வேலாயுதசுவாமிகள் ஆலயத்திலிருந்து செந்தில் கதிர் வேல் சுவாமிகளின் திருச்சொரூபம் சித்திரத் தேரில் வேல் விழாவின் போது பவனி வரும்.

இதற்கான அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சித்திரத் தேர் செய்யப்படவுள்ளதாக தெரிகிறது.

யாழ். செந்தில் கதிர் வேல் விழா ஒவ்வொரு வருடமும் ஆடிமாதத்தில் நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இவ்விழா அமைப்புக்கான தலைவராக நல்லை ஆதீன முதல்வரும், செயலாளராக திரு. செந்தில்நாதனும் உதவிச் செயலாளராக திரு சி. நமசிவாயமும், பொருளாளர்களாக திருவாளர்கள் எஸ் தியாகராசா, எஸ். இராசமோகன் ஆகியோரும் மற்றும் யாழ், பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன், யாழ் மாநகர முதல்வர், அரசாங்க அதிபர் உட்படப் பலர் ஆலோசனை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)

# பட்டினி நிலையில் திருமலை அகதிகள்

கிளிநொச்சி புதன்

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த பன்குளத்தில் இடம்பெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ள 31 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேருக்கு அரசால் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளமைக்கு வன்மையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி முதல் பன்குளம் அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் உணவின்றி தாம் பெரும் கஷ்ட நிலையை அடைந்துள்ளதாகவும் பன்குளத்தில் வன்செயல் தொடர்வதால் தாம் அங்கு செல்லும் சூழ்நிலை உருவாகவில்லை எனவும் இவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் தொடர வழி செய்யப்பட வேண்டும் எனவும் இவர்கள் கோருகின்றனர்.

## இன்று இந்திய - ஆஸ். ரெஸ்ட்

புதுடில்லி செப் 18

இந்திய - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டி இன்று சென்னை சேபாக்கம் சிதம்பரம் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

கபில்தேவ் தலைமையில் போட்டியில் கலந்து கொள்ளும் இந்திய குழுவில் திலீப் வெங்சார்கார் சுகயீனம்காரணமாக பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## கிராமிய வங்கியில் ஓய்வூதியம்

கிளிநொச்சி, புதன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் கிராமியவங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள ஏனைய வங்கிகள் மூடப்பட்டிருப்பதாலே இந்த நடவக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்டோருக்கான——

# உதவியை முழு அளவில் வழங்கக் கோரிக்கை

வல்வெட்டித்துறை, புதன்

திருமலை கரையோரப் பகுதிகளில் வன் செயல்களினால் பாதிக்கப்பட்டு வல்வையில் வந்துதங்கியிருக்கும் மக்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் அரைவாசியாக குறைக்கப்பட்டதையடுத்து, மீண்டும் பழைய அளவு பெறுமதியான நிவாரணத்தை வழங்குமாறு கோரி இம் மக்கள் மகஜரொன்றினை அனுப்பியுள்ளனர்.

திருகோணமலை, ஏகாம்பரம் வீதி [கரையோரப் பகுதி] பன்னத் தோட்டம், 3ம் கட்டை, திருக்கடலூர், வீரநகர், 10ம் குறிச்சி ஆகிய கரையோரப்பகுதிகளில் வாழும் மக்கள் படையினரின் வன் செயல்களால் தமது வீடு வாசல்கள் எரிக்கப்பட்டு உடமைகள் முற்றாகச் சேதமாக்கப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் வந்து அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். ஒரு சிலர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுமுள்ளனர்

இவ்விதம் பாதிப்படைந்த சுமார் 300 குடும்பங்கள் இப்பகுதிகளில் வந்து வழங்கப்பட்டு வந்தநிவாரண உதவிகளைக் கொண்டு தமது ஜீவனத்தை நடத்தி வந்தனர். தற்பொழுது அவர்களின் நிவாரண உதவி அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ் அரச அதிபர், பருத்தித்துறை உதவி அரச அதிபர் வல்வை அகதிகள் புனர்வாழ்வு சங்கத்தினர் ஆகியோருக்கு இவர்கள் அனுப்பிய மகஜரில் தாம் திரும்பவும் திருமலைக்குச் சென்று குடியேற முடியாத நிலையில் இருப்பதுடன் வேறு தொழில்களைச் செய்வதற்கான வாய்ப்புகளும் இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டி தமக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த அகதிகள் நிவாரண உதவியினைத் தொடர்ந்தும் வழங்கும்படியும் கோரியுள்ளனர்-

வல்வை——

# முகாமில் தரையிறங்கிய ஹெலிமீதுபுலிகள் தாக்குதல்

## மற்றைய ஹெலியிலிருந்து துப்பாக்கிச்சூடு

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை இராணுவமுகாமில் நேற்று இறங்க முயன்ற ஹெலிகொப்டர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றையதினம் மாலையில் இரு ஹெலிகொப்டர்கள் இப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டன அதில் ஒரு ஹெலிகொப்டர் முகாமில் இறங்க முயன்ற போதே புலிகள் அந்த ஹெலி' தாக்குதலை மேற்கொண்டனர். இதற்குப் பாதுகாப்பாக மேலாக வட்டமிட்ட ஹெலிகொப்டரிலிருந்துசரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது தொடர்ந்தும் புலிகள் தமது தாக்குதலை மேற்கொண்டதில் 'ஹெலி' இறங்க முயற்சித்ததைநிறுத்தி மேலே பறந்துசென்றது மற்ற ஹெலிகொப்டரும் சில நிமிடநேரம் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்ட பின் வந்த வழியே பறந்து சென்றது

போராளிகளின் இத்தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு ஏற்படுத்தும்வகையில் வல்வை இராணுவத்தினர், முகாமைச் சுற்றியுள்ள தென்னை, பனை மரங்களை வெட்டிச்சாய்த்து 'ஹெலி' இறங்கும் பகுதியைச் சுற்றி மதில்போல்நெருக்கமாக அமைத்து வருவதாக புலிகள் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

துப்பாக்கி ரவைகள், குண்டுகள் துளைக்காதவாறு தமக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தும்வகையில் இக்குற்றிகள் நாட்டப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை முகாமைச்சுற்றியிருந்த பல பெரும் கட்டடங்கள் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# இலங்கை அரசின் புதிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும். குறிப்பாக இச் சந்திப்பு இந்தமாத முடிவிற்குள் இடம்பெறுமென ஹிந்துப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை தனதுசெய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்மொழிமாநில அமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான கோரிக்கை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் பரிசீலனைசெய்வதற்கு உத்தேசித்துள்ளதென்ற உறுதிப்பாட்டை இந்தியாவிடமிருபெறுவிட்டால் தமிழ் தீவிரவாதிகள் அடுத்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளமாட்டார்கள்.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற கடைசி உருவாக்கத்தை அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். இவைகள் ஏற்கெனவே கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களைச் கொண்டுள்ளனவாவெனவும், சந்தேகங்களை நீக்கியுள்ளனவா வெனவும், வித்தியாசமான மொழிபெயர்பைக் கெண்டிருக்கவில்லையாவெனவும் உறுதி செய்வதற்கு அவர்கள் நுணுக்கமாக ஆராய்கின்றனர்.

இந்த உருவாக்கங்கள் மாகாண சபைகள் மத்திய அரசு ஆகியவையின் மீளாய்வு செய்யப்பட்ட நகல் சட்டத்தைக் கொண்டுள்ளன. இவை இந்திய மாநிலங்களில் நிலவும் அதிகாரங்களைப் பெருமளவில் அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆனல் இலங்கை அரசியலமைப்பை மீறுத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆனல் இந்த உத்தேச நகல் சட்டவாக்கத்தில் மாகாண சபைகளை உருவாக்குவதற்கும், அவைகளுக்கு உடன்பாடு காணப்பட்ட அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்கும் ஆக்கப்பட்ட சட்டவாக்கங்கள்' அரசியலமைப்புத் திருத்தங்கள் ஆகியவற்றின்பிரதான அம்சங்கள் தொடர்பாக சொல்லாக்கங்களில் மேலும் சில இடைவெளிகள் காணப்படுகின்றன. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமுன், தமிழ தீவிரவாதிகள் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவரப்படுமுன் பரஸ்பர திருப்திக்கேற்றவாறு திருத்தி அமைக்கப்படவேண்டியுள்ளன.

இந்தியாவில் கிடைக்கப் பெற்ற தகவலின்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இந்திய அரசியல் அமைப்பு நிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

மாநிலசபைகளுக்கான எல்லை நிர்ணய கமிஷன் அமைப்பதற்கு ஒரு வருடம் அல்லது 18 மாதங்கள் வரை எடுக்கும், இது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

## எம். ஜி. ஆர். அடுத்தவாரம் சென்னை திரும்புவார்

சென்னை, செப். 17

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி.ராமச்சந்திரன் அடுத்தவாரம் சென்னை திரும்புவார் என தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

சுகயீனம் காரணமாக மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்கா சென்றுள்ள திரு. ராமச்சந்திரன் சென்னை திரும்பிய பின்னும் சில வேளைகளில் மீண்டும் அமெரிக்கா செல்வாரென்றும் கூறப்படுகிறது. (சி)


## கடைசி நேர வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

கந்தையா பாலச்சந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 9-9-86ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். க. பாலச்சந்திரன், மண்கும்பான் மேற்கு, வேலணை போஸ்ற்.

C 46.6

**லிடோ**

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

சிவாஜி - மஞ்சுளா நடித்த

**உத்தமன்**

[புதிய பிரதி]

18-ம் திகதி முதல்

பிரபு, நளினி நடித்த,

**நியாயம்**

(கலர், புதிய வெளியீடு)

**வெலிங்டன்**

10-30 2-30, 6-30

தியாகராஜன் சில்க் சுமிதா ஜெய்சங்கர்—பானுசந்தர் நடித்த

**நீங்கள் கேட்டவை**

(கலர்) புதிய பிரதி

## இணக்க சபை அறிவித்தல்

யாழ்ப்பாணம் 220A கஸ்தூரியார் வீதியில் உள்ள செல்லையா சிவபாதலிங்கம் - வைரக்கல் நகை வியாபார உரிமையாளரான செல்லையா சிவபாதலிங்கம் அவர்கட்கு பணத்தினையோ அன்றிப் பொருட்களையோ கடனகக் கொடுத்தவர்கள் சகலரும் 28 9 86 இற்கு முன்பு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தகவல்களை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்கள் 28 9 86 க்கு பின்பு வரும் கடன் கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.

**இணக்கசபை**

கலைமகள் சனசமூகநிலையம்,

ஆத்திசூடி வீதி,

கந்தர்மடம்,

யாழ்ப்பாணம்.

[C 4695]

## எமது இன்றைய புதிய வெளியீடுகள்

1. மோகன், ராதா, விசு, அமலா நடித்த **மெல்லத் திறந்தது கதவு** (தரமான பிரதி)
2. அர்ஜுன், அனிதா நடித்த **என் சபதம்** (தரமான பிரதி)
3. சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த **கல் தூண்** (Pyramid)

**வீடியோ பிரசாத்**

இல. 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[C-1288]

பாதிக்கப்பட்ட

# விவசாயிகளுக்கு பசளை விதைநெல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா.

காலபோக உணவுப் பயிர் செய்கையின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், ஏனைய விவசாயிகளுக்கும் விதை நெல், பசளை என்பனவற்றை வழங்குவதற்கு பிரஜைகள் இணைப்புக்குழு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஒவ்வொர் மாவட்டத்திலுமுள்ள மாவட்ட பிரஜைகள் குழுவும், உள்ளூர் ஸ்தாபனங்களும் இணைந்து அவ்வப்பகுதி கிராமங்களில் உள்ள விவசாய விபரங்களை இம்மாதம் 28ம் திகதிக்கு முன்பாக இணைப்புக்குழுவுக்குச் சமரிப்பிக்குமாறு பிரஜைகள் குழுவினர் வேண்டுகின்றனர்.

உழுந்து, பயறு, கச்சான் போன்ற உப உணவுப் பொருட்களைப் பயிரிடுவோருக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஒருஏக்கர் நிலத்துக்கு 2புசல் விதைநெல்லும், ஒரு அந்தர் பசளையையும் இவர்கள் வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச- இ)

## செயற்கை கால்கள்

யாழ்ப்பாணம், புதன்

தாக்குதல் சம்பவங்களினால் கால்களை இழந்தவர்கள், பதிலுக்கு செயற்கை கால்களை பொருத்த விரும்பினால், யாழ் பெரியாஸ்பத்திரி முறிவு, நெரிவு வேலைத்தளத்தில் தங்கள் பெயர்களை அக்டோபர் 15ம் தேதிக்குமுன்னர் பதிவு செய்யுமாறு அன்னையர் முன்னணி தெரிவித்துள்ளது.

(இ)

## நீர்பாசன அலுவலகம் இயங்கவில்லை

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் இராணுவத்தினர்க்கும் போராளிகட்குமிடையில் அண்மையிலேற்பட்ட மோதலைத் தொடர்ந்து கடந்த பத்து நாட்களாக நீர்ப்பாசன அலுவலகம் முற்றாகப் பூட்டப்பட்டுள்ளது. பீதியின் காரணத்தால் எந்த ஊழியரும் சமூகமளிக்கவில்லை [எ]

## விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம். வியா

யாழ் மாவட்ட விவசாயிகளின் நலனை கருத்திற்கொண்டு ஓர் விவசாயக் கருத்தரங்கு எதிர்வரும் 20ம்திகதி சனிக்கிழமை காலை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் மாவிட்டபுரம் லயன்ஸ் கழக ஆதரவில் நடைபெறவுள்ளது

இக்கருத்தரங்கில் தற்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிற்செய்கைகள் தொடர்பான விளக்கங்களும், பயிர்ச்செய்கை முறைகள், உரப்பசளைகள் பாவனை முறைகள் பற்றியும் மேலும் விவசாயத்துடன் தொடர்பான பலவிளக்கங்களும் யாழ் மாவட்ட விவசாய ஆராச்சியாளர்கள், பெறுப்பதிகாரிகளினால் வழங்கப்படவுள்ளது. (சி)

## மணி விழா

வட்டுக்கோட்டை, புதன்

வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை மணிவிழா இம்மாதம் 19ம், 20ம், 21ம் திகதி வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்ப பாடசாலையில் நடைபெறும். (க)

## கல்விக் கண்காட்சி

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகள் வழங்கும் கல்விக் கண்காட்சி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் 22ம், 23ம், 24ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். [எ]

## தையல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வை.டபிள்யூ சி. ஏயில் நடைபெற்ற தையல் வகுப்புகள் தற்காலிகமாக வேம்படி பாடசாலைக்கு முன்பாக உள்ள திருமுறை இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் வழமைபோல வகுப்புக்கள் 18ம் திகதி காலை ஆரம்பமாகுமென்றும் அதிபர் தெரிவித்துள்ளார். [இ]

## பொதுக் கூட்டம்

மானிப்பாய், புதன்

கல்வித் திணைக்கள ஊழியர்களின் கடனுதவிச் சங்கத்தின் ஒத்திவைக்கப்பட்ட கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டப் பொதுக் கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது,

முல்லைத்தீவு மாவட்டப் பொதுக் கூட்டம் வவனியா தமிழ் வித்தியாலய மண்டபத்தில் இன்று நடைபெறும்

# 'இன்றைய இளைஞர்கள் தான் எதிர்காலத்தலைவர்கள்'

பளை, புதன்

''இன்று மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்நிலையில் விளையாட்டுப் போட்டிகள் அவசியமா எனவும் சிலர் நினைக்கிறார்கள், இளைஞர்களின் உடல் உள விருத்தியடைவதோடுசகிப்புத் தன்மை போட்டி மனப்பான்மை புரிந்துணர்வு என்பனவும் இப்போட்டி மூலம் உண்டாகின்றன''

இவ்வாறு கிளிநொச்சி இளைஞர் சேவை மன்ற அனுசரணையுடன் இராமநாதபுரம் இளைஞர் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இளைஞர் சேவை அதிகாரி திரு. கு. பரராசசேகரம் கூறினார்.

இராமநாதபுரம் விளையாட்டு மைதானத்தில் தலைவர் அ. குணசேகரம் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து திரு பரராஜசேகரம் உரையாற்றுகையில் இன்றைய இளைஞர்கள் தான் எதிர்கால முன்னணித் தலைவர்கள். பாரதத்திலே வரும் வீமன் அருச்சுனன் பலசாலிகளாக இருந்தபோதும் தருமருடைய ஆலோசனைகளைப் பெற்றே நடந்தார்கள். அதேபோல இளைஞர்களும் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே நடக்க வேண்டும். இன்றைய இளைஞர்களிடையே வாசிக்கும் பழக்கம் குறைவு. வாசிப்பவர்களும் நல்லவற்றை வாசிப்பதில்லை. நல்லவற்றை வாசிப்பதனால் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம்,

வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு. எஸ். சாம்பசிவம் இராவநாதபுர வித்தியாலய அதிபர் செல்வி. தி வேலுப்பிள்ளை அதிபர் திரு. எஸ், தனிநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர். வட்டக்கச்சி இளைஞர் கழகத்திற்கும் இராமநாதபுரம் இளைஞர் கழகத்திற்குமிடையே போட்டி நடைபெற்றது. (இ)

## விதை நெல் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

புங்குடுதீவு விவசாயிகள் தேவையான இரசாயன உர வகைகளை தட்டுப்பாடின்றிப் பெறக்கூடிய நிலையிலிருப்பதாகவும், விதை நெல் பெறுவதே சிரமமாக இருப்பதாகவும் புங்குடுதீவு மேற்குப்பகுதி பயிர்செய்கை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்,

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி சோபனா யோகராசா

மண்ணில்: 02-01-1935

விண்ணில்: 19-08-1986

''கல்லறையில் உம்மை வைத்தோம், கண்ணீரால் மூடிவிட்டோம்''

இவரின் ஆத்ம சாந்திக்காக உடுவில் திருச்செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று (18-9-86) வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற்பாடற் பூசையில் பங்குபற்றி பிரார்த்திக்குமாறு அனைவரையும் வேண்டுகிறோம்

அன்னாரின் மரணச்சடங்கின் போது சமூகம் தந்து அனுதாபம் தெரிவித்தும் மலர்வளையம் சாத்தியும் இரங்கல் செய்தி அனுப்பியும், இரங்கல் உரை ஆற்றியும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

'காந்தி ஆச்சிரமம்'
உடுவில். C 4692

## மாட்டு வளர்ப்புக்கு கடன் வசதி

வேலணை. வியாழன்

தரமான நல்லின மாடுகளை வளர்ப்போர்களுக்கு கால்நடை வைத்தியத்திணைக்களம் மானிய அடிப்படையில் பணத்தினை வழங்க முன்வந்திருக்கின்றது.

ஒரு நல்ல இன மாடு ஒன்றை தெரிவுசெய்து வளர்த்து அந்த மாடு நாகுகன்று ஈன்று அதன்மூலம் அந்தமாடு ஒரு நேரத்திற்கு 6 போத்தல் பாலைக் கொடுக்குமாயின் அம்மாட்டை வளர்த்தவர்களுக்கு (3500/-) மூவாயிரத்தி ஐந்நூறு ரூபாவை கால்நடை வைத்திய திணைக்களம் மானியக் கொடுப்பனவாகக் கொடுக்கவிருக்கின்றது.

## மணிவிழா...

(3-ம்பக்கத் தொடர்ச்சி

மாகவோ என்னவோ இவர்கள் இவ்வூரை முன்னேற்றுவதற்கு அரும்பாடுபட்டு அயராது உழைத்து வருகிறார்கள்.

தனது 60 வது வயதை பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் இப்பாடசாலையானது அறியாமை எனும் இருள் அகற்றி அறிவெனும் ஒளியூட்டி எட்டுத்திசையும் புகழ்பரப்பி பல்லாண்டு காலம்வாழவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

--சி. திருக்கேதீஸ்வரன்
பழையமாணவன்

BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக) யாழ்ப்பாணம்:

DAY CLASS

MATHS — திரு. நல்லையா
PHYSICS — திரு. மணியம்
CHEMISTRY — திரு. சிவநாதன்
ZOOLOGY — திரு. கெங்கா
BOTANY — திரு. சர்வானந்தா

ஆரம்பம் : திங்கள் 9 மணி

கலை, வர்த்தக DAY CLASS ஆரம்பமாகிவிட்டன.

[A 1337]

## 33-வது பொதுக்கூட்டம்

கல்வித்திணைக்கள ஊழியர்களின் கடனுதவிச் சங்கத்தின் (E D C. S.) ஒத்திவைக்கப்பட்ட கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டப் பொதுக்கூட்டம் 21-09-86 ஞாயிறு பகல் 10 மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், முல்லைத்தீவு மாவட்டப் பொதுக்கூட்டம் வவுனியா தமிழ் வித்தியாலயத்திலும் நடைபெறும் அனைவரும் அறிமுக அட்டையுடன் சமுகம் தரவும்.

விக்கிரம ஹென்றுயக,
பிரதம செயலாளர்.

[C 4685]

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு கிழமையும் கொழும்பிலிருந்து நேரடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகள் ★

வருமான ஒழுங்குகளுடன் அழைத்துச் செல்லப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES
யூனிவேர்சல் ஏஜென்ஸி
125 [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

[A 1324]

பிரயாண ஒழுங்குகள்

ஓமான்: ஆஸ்பத்திரி தாதிகள் (NURSES) கிளீனேஸ் ஆண்கள் இருவாரத்தில் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

அபுதாபி: பாம் தொழிலாளர்கள் மேசன் பிளம்பர் எலக்ரிசியன் போன்றோருக்கு உடன் பிரயாணம்.

ஈராக்: கட்டிடச்துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு நேரடிப்பிரயாணம்

சவூதி: ஆஸ்பத்திரி ஆண் பெண் கிளீனேஸ். சவூதி கற்றறிங் ஹோட்டல் தொழிலாளர்கள் (SAUDI CATERING)

பிரயாண ஒழுங்குகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு
R K. பரமசுவாமி
(பவானி)
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு

C 4690

## தென்னாபிரிக்கா——

# தங்கச்சுரங்கத்தில் விபத்து

# 50 பேர் பலி; பலர் காயம்

பிரிட்டோரியா செப், 17

**தென்னாபிரிக்காவில் ஜொஹனர்ஸ்பேர்க் நகருக்கு அருகாமையில் தங்கச் சுரங்கமொன்றில் இடம்பெற்ற தீவிபத்தொன்றில் சுமார் 50 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். 150 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜொஹானர்ஸ்பேக்கிற்கு கிழக்கேயுள்ள இத்தங்கச் சுரங்கத்தில் ஒட்டு வேலையொன்றின்போது ஏற்பட்ட தீயையடுத்தே இந்த விபத்து இடம் பெற்றது.

தொடர்ந்து அச் சுரங்கத்தில் 1 கிலோ மீட்டர் ஆழத்தில் 'டொக்ஸிக, நச்சுவாயு வெளியேறி உயிராபத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 2000 சுரங்கத் தொழிலாளர்கள் இந்த விபத்து நடந்தவேளை அந்தச் சுரங்கத்தினுள் நின்றனர். இவர்களுள் பலர் உடனடியாக வெளியே கொண்டுவரப்பட்டனர். 50 பேர் வரை மட்டுமே உடனடியாகக்கொல்லப்பட்டனர். 150 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. 200 பேர் வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

## ஆயுள்வேத வைத்தியர்களுக்கு ஒய்வூதியம்

சென்னை செப் 17

பேரறிஞர் சி. என் அண்ணாதுரை பிறந்த தினத்தை முன்னிட்டு 60வயதுக்கு மேற்பட்ட சித்த ஆயுள்வேத மருத்துவர்களுக்கு ஒய்வூதியப் பணமாக மாதாந்தம் 150 ரூபா வழங்க தமிழ்நாடுஅரசு முன் வந்துள்ளது

60 வயதுக்கு மேற்பட்ட தொழில் பார்க்க முடியாத ஆயுள்வேத வைத்தியர்களுக்கே இவ்ஓய்வூதியம் வழங்கப்படும்.

## தென்னாபிரிக்காமீது——

# ஐ.பொ.ச.மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை

லண்டன் செப் 17

தென்னாபிரிக்காமீதுஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இச் சமூகத்தின் வெளிநாட்டமைச்சர்கள் கடந்த சில தினங்களாக நடத்திய கூட்டத்தின் இறுதியிலேயே இத் தடை விதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் இருந்து தங்க நாணயம், இரும்பு, எஃகு ஆகியவற்றை இறக்குமதிசெய்வது உட்பட அங்கு வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதற்கு இத்தடை போடப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும் தென்னாபிரிக்க நிலக்கரிமீதான தடை இம்மாத இறுதியிலேயே கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இரும்பு, எஃகு ஆகியன மீதான தடை இம்மாதம் 27ந் திகதி முதல் அமுல் செய்யப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அரசின் இன ஒடுக்கல் கொள்கைக்கெதிரான ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் ஒரு காத்திரமான நடவடிக்கை இதுவென்று தெரிவிக்கப்பட்டது

ஐ.பொ.ச. இப்பொருளாதாரத் தடையை அறிவித்துள்ளபோதிலும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தாட்சர் மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹெல்மட் கோல் ஆகியோர் இத் தடைகுறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்:

தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடைவிதிக்க பிரிட்டன் மறுத்திருந்ததும், ஐ.பொ.ச.கூட்டத்தில் இத்தடையை மே ஜர்மன், போர்த்துக்கல் ஆகியன ஆதரிக்காததும் குறிப்பிடத்தக்கது.

## கடற்றொழிலாளர்——

# குறைகளை நிவர்த்திசெய்வது சங்கத்தினர் பொறுப்பாகும்

வல்வெட்டித்துறை, புதன்

"தற்போது நிலவும் சூழ்நிலையில் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் கரையோர மக்களே, அதிலும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் முப்படையினரின் தாக்குதல்களுக்கும் இலக்காகி பலத்த கஷ்டங்களை அனுபவித்தும், உயிர்களைப் பலி கொடுத்தும், பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தமது அன்றாட வாழ்க்கைக்காக உயிரைப் பணயம் வைத்து தொழிலுக்குச் செல்கின்றனர். இந்த நிலையில் அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பு கடற்றொழிலாளர் சங்கத்தின் கடமையாகும்."

இவ்வாறு முன்னைய மீன்பிடி கடற்றொழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கத்தினை புனரமைப்புச் செய்யும் நோக்குடன் இளைஞர்களின் கையில் பொறுப்புக்களை ஒப்படைத்து வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கிராம அபிவிருத்தி விரிவாக்க சேவா சங்கம் என்னும் பெயரில் புதிய சங்க உறுப்பினர்களைத் தெரிவு செய்யப்பட்ட கூட்டத்தில் முன்னைய சங்கத்தலைவர் திரு. ந. வைத்திலிங்கம் கூறினார்.

பின் வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர். ப. அருளானந்தசாமி, உப தலைவர்: த சுரேஷ். செயலாளர்: க. ரெத்தினசிகாமணி, பொருளாளர்; சு வெற்றிவடிவேல், நிர்வாக சபை உறுப்பினர்களாக; செ. பாலகிருஷ்ணசாமி, சி. தயாநிதிவேல், தே. யோகசிகாமணி, சி. இந்திரதாஸ், பொ. யோகேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## பேச்சுக்கள் பின்போட வேண்டிய நிலை

லண்டன், செப் 17

மட்டக்களப்பில் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் கடும் மோதல்களின் விளைவாக இம்மாதம் இறுதியில் நடைபெறவிருந்த 3ம் கட்ட பேச்சுவார்த்தைகள் அடுத்த மாத நடுப்பகுதி வரை பின்போடவேண்டியேற்பட்டுள்ளதாக பி. பி. ஸி அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு படுவான் கரையில் படையினர் முகாமிட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு மோதல்கள் இடம் பெற்றுவருவது தெரிந்ததே.

# பிறேஸிலில் சிறை உடைப்பு முறியடிப்பு:11 கைதிகள்பலி

றியோடிஜெனேரியோ செப் 17

பிறேஸிலில் சிறை அதிகாரிகளைப் பணயம் வைத்து மேற்கொள்ளப்பட்ட சிறை உடைப்பு முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது. இம்முறியடிப்பில் 11 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர்.

பிறேஸில் சிறைக்கூடங்களில் போதியளவு சௌகரியங்கள் இல்லாமையால் இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதுண்டென்றும் சிறைக்கைதிகளே தமக்குள் ஒருவரையொருவர் கொலை செய்வதுண்டென்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இப்பணயநடவடிக்கை ஆரம்பமானது பிறேஸிலின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள கிராமமொன்றில் இச் சிறைக் கூடம் அமைந்துள்ளது

இங்குள்ள கைதிகள் கத்தி முனையில் சிறை அதிகாரிகளைப் பணயம் வைத்து தாம் தப்பிச் செல்ல அனுமதிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் தாம்செல்வதற்கு ஒரு பஸ்வண்டி இரு மோட்டார் கார்கள் உட்பட இயந்திரத்துப்பாக்கி ஒன்றையும் தர வேண்டுமென கேட்டிருந்தனர்

இயந்திரத் துப்பாக்கி தவிர்ந்த ஏனையவற்றை வழங்க அவர்கள் முன்வந்தனர். ஆனால் கைதிகள் இதற்குமறுத்தனர்.

தொடர்ந்து 600 பேர் கொண்ட விசேட பொலிஸ் அதிரடிப் பிரிவொன்று அச் சிறைக்கூடத்தினுள் நுழைந்து பணயநடவடிக்கையில் ஈடுபட்ட கைதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

## உலகச் செய்திகள்

# 'இளைஞர்களின் தியாகங்களை உதாசீனம்செய்யக்கூடாது"

யாழ்ப்பாணம், வியா

"இன்று கம்யூனிசம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சக்தி மாத்திரமல்ல உலகளாவிய ரீதியில் அதிகம் செல்வாக்கு மிக்க சக்தியாகவும் வளர்ச்சி பெற்று விட்டது. அத்துடன் உலக வளர்ச்சிப் போக்கை நிர்ணயிக்கக் கூடிய சக்தியாகவும் வளர்ந்து கொண்டிருக்கின்றது அதேநேரத்தில் கம்யூனிஸ்டுக்களைக்காட்டிலும் தாங்கள் தான் உண்மையான கம்யூனிஸ்ட்டுக்கள் என்று கூறும் பிரிவுகளும் வளர்ந்துள்ளன. இதனையிட்டு இளம் சந்ததியினர் மிகவும் எச்சரிக்கையாகஇருக்கவேண்டும்."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சமமேளன யாழ் கிளைக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர்களில் ஒருவரான திரு. ஐ. ஆர். அரியரத்தினம் கூறினார்.

திரு. ரீ. குகதாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

"இளைஞர்கள் மாற்றங்களை விரும்பி செயல்படுகிறார்கள். அநீதியையும் கொடுமைகளையும் சுரண்டல்களையும் எதிர்த்துப் போராடுகின்றார்கள் அவர்களுடைய தியாகங்களை நாம உதாசீனம் செய்யக்கூடாது. அவர்களுடைய எண்ணங்களையும் செயல்பாடுகளையும் சரியான முறையில் நெறிப்படுத்தி நாட்டின் நன்மைக்காகவும் எதிர்கால சுபிட்சத்திற்காகவும் பயன்படும்வகையில் ஒவ்வொரு தேசபக்த சக்திகளும் செயல்படவேண்டும்."

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில், "கம்யூனிஸ்ட் கட்சி தனது நாற்பத்திமூன்று வருடகால வாழ்வில் இலங்கை மக்களுக்கு சேவை செய்துள்ளது. மக்களின் நலனுக்காக சளைக்காமல் போராடி வந்துள்ளது. எமது மக்கள் தொகையில் பெரும்பான்மையினரான வாலிபர்களின் நன்மைகருதி செயற்பட்டுள்ளது. வாலிபர்களை சித்தாந்தரீதியாக வளர்த்தெடுப்பதற்கானமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

சோவியத் எதிர்ப்பு எந்த வடிவத்தில் வந்தாலும் அது பிற்போக்காளர்கள் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளைப்பலப்படுத்துவதற்கே உதவும் என்று கூறிய அவர் கம்யூனிசத்தின் பெயரால் கம்யூனிசத்தை எதிர்க்கும் பணியில் பிற்போக்கு கும்பல் செயற்படுகின்றது இதனை முறியடிக்க வாலிபர்கள் தங்களை சித்தாந்த ரீதியாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும். என்றார்.

திரு. க. நவரத்தினம் பேசுகையில் 'வெகுஜனங்கள் இல்லாத போராட்டம் வெற்றி பெறமுடியாது. உண்மையானதும் தீர்க்கமானதும் இறுதியானதுமான புரட்சிகர போராட்டத்திற்கு வெகுஜனங்களை அழைத்து செல்ல வேண்டும்" என்றார்.

## ஐ. நா. 41-வது கூட்டத்தொடர்

# பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் தலைவர்

நியுயோர்க், செப் 17

ஐ. நா. ஸ்தாபனத்தின் 41வது கூட்டத்தொடரின் தலைவராக பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. சௌத்ரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தெரிவுஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இதற்குமுன்னர் 40வது கூட்டதொடரின் தலைவராக ஸ்பெயின் வெளிநாட்டமைச்சர் பதவிவகித்தது குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதையடுத்து திரு. சௌத்திரி உரை நிகழ்த்துகையில், ஐ. நா. ஸ்தாபனத்தின் உறுதியான எதிர்கால நடவடிக்கைகளுக்கு உறுப்பு நாடுகள் முன்னின்று உழைக்கவேண்டுமென்றார்.

அத்துடன் தற்கால நிலைமைகளுக்கேற்ப ஐ. நா. சபை தனது செலவீன மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்:

## சிதம்பரம் ஸ்ரேடியத்தில் நவீன வசதி

சென்னை செப் 17

சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் விளையாட்டரங்கில் மின் அணு ரெலிபிறிண்டர் வசதிகள் மற்றும்சர்வதேசதொலைத் தொடர்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தி-ஆஸ்திரேலியடெஸ்ட் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு பார்வையாளர்களின் வசதிகருதியே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் விளையாட்டரங்கொன்றில் மின்அணு ரெலிபிறிண்டர் வசதிகள் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

புங்குடுதீவு விவசாயிகள் தேவையான இரசாயன உர வகைகள் தட்டுப்பாடின்றிப் பெறக்கூடிய நிலையில் இருப்பதாகவும் விதைநெல் பெறுவதே சிரமமாக இருப்பதாகவும் புங்குடுதீவு மேற்குப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (எ)

அறிவித்தல்

Skanda O.S.A. Meeting 1986

ஸ்கந்தவரோதயா கல்லூரி பழையமாணவர் சங்க அமைப்புக்குழுபொதுக்கூட்டம்-1986

திகதி: 21 - 09 - 86

நேரம்: பிற்பகல் 3 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் தவருது சமூகமளிக்குமாறு வேண்டிக்கொள்கின்ருேம்; சமூகமளிக்க சந்தர்ப்பம்கிடைக்காதவர்கள் தமது விலாசத்துடன் தவருது எம்முடன் தொடர்புகொள்ளவும்.

நன்றி

அமைப்புக்குழு

ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்ஞகம். [C 4686]


## பழைய மாணவர் கோரிக்கை

நெல்லியடி, புதன்

உடுப்பிட்டி பருத்தித்துறை ஆகிய கல்வி வட்டாரங்களுக்கான கல்வித் திணைக்கள உப பணிமனை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபரின் விடுதியில் அமைக்கப்படுவதை எதிர்த்துமேற்படிவித்தியாலய பழைய மாணவர் சங்கம் வடபகுதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்திற்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளது.

இப்பணிமனை வித்தியாலய அதிபர் விடுதி தவிர்ந்த வேறு ஒரு பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டுமெனவும் இம்மகஜர் கோருகிறது. (இ)

## பிரஜைகள் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம். வியாழன்

கிளிநொச்சி கச்சேரியை இடமாற்றம் செய்து மீண்டும் செயல்பட வைக்கவேண்டும்: என பிரஜைகள் குழு அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி கச்சேரி கடந்த ஜூன் 4ம் தேதி முதல் செயல்படாததினுல் பொது மக்கள் தமது கருமங்களை செய்ய முடியாமல் இருக்கின்றுர்கள் என்றும் இதனுல் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மயிலிட்டி பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம், வியாழன்

"எவ்விதப் பாகுபாடுமின்றி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க நாம் பிறருக்கு உதவி புரிவது அவசியமாகும்.''

இவ்வாறு மயிலிட்டி பிரஜைகள்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு வி. இரத்தினராஜா கூறினுர்.

பிரஜைகள்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் வண. பிதா ரி. தேவராஜன் தலைமையில் ரேுயன் கத்தோலிக்க வித்தியாலயத்தில்நடைபெற்றது.

தலைவராக திரு. வி. இரத்தினராஜா தெரிவானதைத் தொடர்ந்து உப தலைவராக சி. இராமநாதனும், செயலாளராக சி, அந்தோனிப்பிள்ளையும் உப செயலாளராக க. ஞானேந்திரனும், பொருளாளராக சி. சற்குணராஜாவும் தெரிவானுர்கள். மற்றும் 11 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

## இன்றைய பலன்

மாதம்:- புரட்டாதி

திகதி:- 2 (18-09-86)

கிழமை:- வியாழன்

திதி:- பூரணை

நக்ஷத்திரம்:- பூராட்டாதி

மேடம்:- நீண்டநாள் எதிர்ப்பார்த்த செய்தி இன்றுகிட்டும். இனசனம் கூடுவர். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு.

இடபம்:- ஆசாரக்குறைவுகு இடமுண்டு; குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம். பொருள் நழுவக்கூடும்.

மிதுனம்:- இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும்; வணிகார்களுக்கு நன்ருவ்; பொருள் வரவுமுண்டு.

கடகம்:- புதிய நண்பர்சேர்க்கையுண்டு. வரவிலும் திருப்தியுண்டு. குடும்ப மகிழ்ச்சியுமுண்டு.

சிங்கம்:- வீட்டிலும் சிறுபிணி தலைதூக்கும். முன்னேற்றம் தடைப்படும். தொழில் விடயத்தில் நிதானம்நன்று.

கன்னி:- களஸ்திர வழிச்சுகமுமுண்டு. டாக்டர்கள் போற்றப்படுவர். உத்தியோக நலனுமுண்டு.

துலாம்:- வியாபாரத்துறையில் நஷ்டமுண்டு. ஆத்திர உணர்ச்சியை அடக்கவும். பெண்கள் மிகவும் அவதானமாகயிருக்கவும்.

விருச்சிகம்:- பெரியோர் புகழ்ச்சியுண்டு. நீண்டநாள் கடன்இன்று நிவர்த்தியாகும். தந்தைவழிமூலம் நன்மையுண்டு.

தனுசு:- மணவாழ்வில் மகிழ்ச்சியுண்டு. நற்காரியங்களுக்கு வழிகோலப்படும். தொழில் விருத்தியுமுண்டு.

மகரம்:- பிறர் ஆசியுண்டு. கல்வி மூன்னேற்றமுண்டு. லாபகரமான தொழில் கிட்டும். குடும்ப நலனுமுண்டு.

கும்பம்;- இன்னலின் பின்னல உங்களைத் தாக்கும், கொள்வனவுகளைப் பின்போடவும். மனத்திடம்வேண்டும்.

மீனம்:- எல்லிடயத்திலும் விழிப்புடன் இருக்கவும். அவசரப்போக்கைத் தவிர்க்கவும். குடும்பத்திலும் பொறுமையுடன்நடந்து கொள்ளவும்.

திருமலை வேலுப்பிள்ளை





கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

(A 1041)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 18-9-86

## சவூதி குழு விஜயம்

கொழும்பு, புதன்

இலங்கை பற்றிய உண்மை நிலையை அறிவதற்கென 7 பேர் கொண்ட சவூதி அரேபிய வெகுஜன தொடர்பு சாதனக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

● உணவு எடுத்துச்செல்ல பாதுகாப்பு மறுப்பு ● பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் காடுகளில் தஞ்சம்

# தொடர்ந்து குண்டுவீச்சு: யுத்த பூமியாக படுவான்கரை மாற்றம்!

### 7 வீடுகள், ஒரு அரிசி ஆலை, பாடசாலைகள், இந்து ஆலயங்கள் தகர்ப்பு

[மட்டக்களப்பு, நிருபர்]

யுத்தபூமியாக மாறிவிட்ட படுவான்கரைப்பகுதி, தொடர்ந்து ஏனைய பகுதிகளுடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகிறது.

அப்பகுதி மக்கள் நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்தநிலையில் அனாதரவாகிவிட்டதால், நிவாரண உதவி எதுவும் எட்டக் கூடியதாக இல்லை.

இலவச உணவு வழங்க மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஆயத்தங்கள் செய்த போதிலும் அவற்றை மட்டக்களப்பிலிருந்து வலையிறவுப்பாலம் ஊடாக கொண்டுசெல்லபாதுகாப்பு அளிக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் பாதுகாப்பு அதிகாரி அதற்கு மறுத்துவிட்டார்.

கடந்த 8 நாட்களாக படுவான்கரைப்பகுதியைச்சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் மட்டக்களப்புவாவியூடாக காத்தான்குடி, கரையாக்கன் தீவுக்கரை, பிள்ளையாரடி, ஈச்சந்தீவு ஆகியஇடங்களின் இரு கடவுத்துறையாலும் பட்டினியால்வாடும்மக்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்ல மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பாதுகாப்புப்படை அதிகாரிகளைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பதில் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை அப்பகுதிக் கூட்டுறவுக் கடைகளின் ஊழியர்களும் தங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்று மட்டக்களப்பிலிருந்து கடமைக்குச் செல்ல மறுத்துவிட்டனர்.

உணவு, உடை, உறைவிடமின்றி காடுகளுக்குள் தஞ்சமடைந்திருக்கும் இந்த அப்பாவி மக்களின் அல்லோலகல்லோலத்துக்கு மத்தியில் நேற்றுபுதன்கிழமையும்குண்டுகள், வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருக்கிறது.

இது இவ்வாறிருக்க கடந்த திங்கள், செவ்வாய் இரு நாட்களில் இடம்பெற்ற குண்டுவீச்சினால் ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள்பற்றி மதிப்பீடு செய்யப்படவில்லை.

இதுவரை கிடைத்த தகவலின்படி காயாங்மடுவில் குண்டுவீச்சினால் 7வீடுகளும், அரிசி ஆலையும் எரிக்கப்பட்டதாகவும், குறிஞ்சா முனையில் பாடசாலைக் கட்டிடங்கள் இந்து ஆலயங்கள் தகர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் மட்டக்களப்பு விமான நிலையத்தில் 2 குண்டுவீச்சு விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி சாரதாம்பாள் மகேஸ்வரக்குருக்கள்

வண்ணார்பண்ணையை சேர்ந்த சாரதாம்பாள் மகேஸ்வரக்குருக்கள் 17-09-86 சிவபதம் எய்தினார். அன்னார், காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ கா. மகேஸ்வரக்குருக்களின் மனைவியும், செந்தில்நாதசர்மா, பரமேஸ்வரி, வரதலட்சுமி ஆகியோரின் தாயாரும், சிவராஜக்குருக்கள், கனகசபாபதிசர்மா, சங்கரம்மா ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சிவலிங்கப் புளியடியிலுள்ள அவரது இல்லத்தில் 17-09-86ல் நடைபெற்றன.

[C4694]

### யசிந்தா குருசுமுத்து

நாரந்தனை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற குருசுமுத்து அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி யசிந்தா குருசுமுத்து காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்ரனிப்பிள்ளை (U. D A கொழும்பு, திருமதி பரியஸ்ரெலா சிறிஸ் (நாரந்தனை றோ க. வித்தியாலயம்) லீனஸ் [லக்மீ, நீர்கொழும்பு] இராஜேந்திரம். [டென்மார்க்] திருமதி புஸ்பம் செல்வராஜன் [கரம்பொன் சண்முகநாத ம வி] திருமதி ஜேட்றூட் கனகலிங்கம் [இளைப்பாறிய இலிகிதர்] டேணுட் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் புனித இராயப்பர் சேமக்காலைக்கு 18-09-86 வியாழக்கிழமை பி. ப. 3 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். [C 4684]

### திரு. நடராசா துரைராசா
(ஊரெழு)

ஊரெழு முன்னைநாள் கணேசவித்தியாசாலை அதிபரும், ஊரெழுப் பிள்ளையார் கோவில் நிருவாகசபைச் செயலாளருமான நடராசா துரைராசா காலமானார். இவர் தனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன் (நீர்ப்பாசன இலாகா, திருகோணமலை), சாந்தகுமார் (சுவிஸ்லாந்து), ஜெயதேவன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயதீஸ்வரன் (மாவட்ட நீதிமன்றம். மல்லாகம்), திருமதி ஸ்ரீசத்தியபாமா-துரைவீரசிங்கம், உமாபதி ஆகியோரின் தந்தையும், துரைவீரசிங்கம் (ஆசிரியர். யா/ ஒஸ்மானியாக்கல்லூரி), சகுந்தலா- ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தன், தனுஷியா, தஜந்தன், மேகலா, காங்கேயன், காருணியா ஆகியோரின் பேரனும், தம்பையா, கந்தையா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 09 86 (இன்று) வியாழன் மாலை ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெறும்.

[C 4691] தகவல்: து. ஜெயதேவன்.

### பிச்சைகுரூஸ் ரோசம்மா

ரவிதாஸ் ஸ்ரோஸ் உரிமையாளரின் தாயார் பிச்சைகுரூஸ் ரோசம்மா 17-09-86 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற யேசுரட்ணம், விக்ரோறியாவின் அன்புமனைவியும் பி. மாணிக்கம் குரூஸ் (மட்ருஸ்), காலஞ்சென்ற இருதயம் குரூஸ் (கண்டி), புஸ்பம் குரூஸ் (இந்தியா), சார்ந்தக்கம்மா குரூஸ் (இந்தியா, அருள்சாந்தம்மா குரூஸ் (மன்னார்), செவஸ்தி அம்மா குரூஸ் ஆகியோரின் சகோதரியும், நேசம் விக்ரோரியா (ரவிதா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), றேசாரி விக்ரோரியா, மனோகரி விக்ரோறியா, விஷயருணி விக்ரோரியா, மனோகரன் விக்ரோறியா (ரவிதா ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்), அன்ரன் விக்ரோரியா (சுவிஸ்லாந்து). நவரட்ணரூயா விக்ரோரியா (ரவிதா ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், புனிதம்தவேரு (டாக்டர் பரராசசிங்கம் பல் வைத்தியநிலையம், கொட்டடி). ஜெயவதி தவேரு, ஸ்ரான்லி வில்வரூயர் (கரிஸ் எக்ஸ்போட். கொழும்பு), நேவிஸ் குரூஸ் சாந்தி குரூஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிச்சையா குரூஸ் (சுவிஸ்லாந்து), செல்டன், யூட்டின் குரூஸ் ஆயோரின் பெரியதாயாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 30 சென். செபஸ்தியன் வீதியில் இருந்து 20-9-86. சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[C-4697]

## ஆனையிறவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு அங்குல மோட்டார் ஷெல் தாக்குதல் நடாத்தினர். எமது தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கு முகமாக நேற்றுக் காலை 8 மணியளவில் ராணுவத்தினர் 100க்கும் மேலாகப் புறப்பட்டு கவச வாகனம் சகிதம் வந்து கொண்டிருந்த வேளை எமது வீரர்கள் யேற்கொண்ட 'கனன் சார்ஜ்' தாக்குதலில் கவச வாகனம் தலை கீழாகப் புரண்டது. மேலும் எம்மவர்கள் நேரடித் தாக்குதலையும் நடத்தியதால் ராணுவத்தினரால் மேலும் முன்னேற முடியவில்லை, கவச வாகனம் புரண்டதில் 4 பேர் படுகாயமுற்றனர். ராணுவத்தினர் இதுவரை கவசவாகனத்தை மீட்காதவாறு எம்மவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுளளனர். அதேவேளை காயமடைந்த ராணுவத்தினரை ஹெலிகொப்டர் மூலம் ஏற்றிச் சென்றனர்.

மேலதிக சேதவிபரம் தெரியவில்லை எம்மக்களைப் பாதுகாப்பதில் எமது வீரர்கள் தொடர்ந்தும் தயார் நிலையில் உள்ளனர்'' (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## தமிழ்த் தொழிலாளர் மீது.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத் தோட்டத்துக்கு அண்மையில் கொலணியில் குடியிருக்கும் காடையர்கள் கோஷ்டி ஒன்று திடீரென்று இப்பகுதிக்குள் புகுந்து தமிழ்க் குடும்பங்களைத் தாக்கத் தொடங்கினர்.

கர்ப்பிணிப் பெண்களையும், குழந்தைகளையும் கூட தம்மிஷ்டப்படி இம்சைப் படுத்தினராம்.

மேலும் வீடுகளை அடித்து உடைத்து சேதமாக்கியதுடன் அங்குள்ள உடைமைகளையும் கொள்ளை அடித்துள்ளனர்.

காடையர்களின் அட்டகாசத்தை எதிர்க்க முடியாமல் அப்பாவித் தொழிலாளர்கள் உடுத்த உடைகளுடன் காடுகளுக்குள் ஓடி மறைந்திருந்து பின்னர் இந்து மகாசபை மண்டபத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ் அகதிளுக்குப் போதிய உணவு வசதி இதுவரை வழங்கப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து இ தொ கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

[ஹற்றன் நி.மா]

## இராணுவம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளம் நகரிலுள்ள தமிழர்களின் கடைகளும் ஆயுதப் படையினரால் உடைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்குள்ளிருந்த பொருள்களும் சூறையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## ஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறுவது பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கும். இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எதுவித உடன்பாடும் ஏற்படவில்லை''.

கருத்து வேறுபாடுள்ள விடயங்களில் தவறான அறிக்கைகளை வெளியிடுவது, நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளிற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்குமென்றும் இலங்கை அரசு உண்மைக்கு மாறான கருத்துகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டுமென்றும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. [சி]

## மாங்குளம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் பலர் காயமடைந்தோ அல்லது கொல்லப்பட்டோ இருக்கலாம். காயப்பட்ட அல்லது கொல்லப்பட்ட இராணுவத்தினரை ஏற்றி இறக்கும் பணியில் ஹெலிக்கொப்டர் ஒன்று ஈடுபட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது இராணுவத்தினரின் தாக்குதல்களும் மக்கள் விடுதலைப் படையினரின் எதிர்த் தாக்குதல்களும் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இத் தாக்குதலின் போது மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்ட மேலும் ஒரு மக்கள் விடுதலைப் படைத் தோழர் சிறீதரன் எதிரியுடன் கடும் சமர் புரிந்து களத்தில் வீரமரணமடைந்துள்ளார்.

## தேடுதல்வேட்டை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்டோர் குறுஞ்சாமுனை, சன்னன்குடா, மணற்பிட்டி ஆகிய கிராமங்களை முற்றுகையிட வந்துள்ளனர் இவர்கள் மீண்டும்நேற்று அதிகாலை ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டு துப்பாக்கிபிரயோகம் மேற்கொள்ள பொம்பர், விமானங்களும் வட்டமிட இக்கிராமங்கள் மீது முற்றுகையிட முனைந்த சமயம் எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாலைவரை முற்றுகை முறியடிப்பிற்கா எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்'' (மா)

## மரண அறிவித்தல்

### சபாபதி செல்லத்துரை

தோற்றம்:-1927-09-09 மறைவு:- 1986-09-17

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சபாபதி செல்லத்துரை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியரும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், பரராஜசிங்கம் அளவெட்டி, அம்பிகாதேவி, செகராசசிங்கம் [லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்], அமிர்தாதேவி [தெல். கூட்டுறவு வைத்தியசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீகாந்தன் [ஜெர்மனி], தவமணி [குடும்ப நல சேவையாளர் அளவெட்டி] ஆகியோரின் மாமனாரும்; கஸ்தூரி, ஷோபனா, காயத்திரி, சௌந்தர்யா. சௌரிபவதாரினி, காந்தரூபன், சாந்தரூபி, சற்சொரூபி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-9-86 வியாழக்கிழமை இன்று கொல்லங்கலட்டியில் நடைபெறும்.

தகவல்!

திருமதி மங்கையற்கரசியும், பிள்ளைகளும்.

[C 4698]